
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed - Journal Multidisilinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :25 January 2025*
கோட்டை:7 வாயில்:25 ஜனவரி 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research


# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And  Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


அகப்பொருள் மரபுகளின் பொருண்மைகள்
தெ.மதுபாலா

தற்காலப் பயன்பாட்டில் தன்மை வினைமுற்றுச் சொற்கள்
கோ. கோகிலா

தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியர்கள் சிறந்த ஆசிரியர்கள்
முனைவர்.வி.சேகர்

ஐங்குறுநூற்றில் மருத நில வாழ்வியல் கோட்பாடு
கோ. கோகிலா

ஐங்குறுநூற்று மருதத்திணையில் "வேட்கைப் பத்து" வெளிப்படுத்தும் செய்திகள்
த.கல்பனா

சங்க இலக்கிய அகப்பாடல்களில் தோழியின் உளவியல் கூறுகள்
கு.கலையரசி

ஆற்றுப்படை இலக்கியத்தில் ஐந்திணைசார் உணவுகள்
மு.கௌசல்யா

சங்க இலக்கியங்களில் சமூக உறவுகள்
முனைவர் வெ. நளினி

பறம்பு மக்களின் பரந்த வாழ்வியல்
வீ. மஞ்சு

குறுநில மன்னா ்களின் பொருளாதாரநிலை
மு. சதீஸ்குமார்

கம்பராமாயணம் காட்டும் வாலிவதைப்படலம்
மு.கனகவள்ளி

காப்பியங்களில் மரபுக்கருவிகள்
வீ.விஜயலட்சுமி



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


**இஸ்லாமிய சூஃபித்துவமும் சடங்கு முறைகளும்**
முனைவர் சா.இன்குலாப்

**தேவிபாரதியின் "உயிர்த்தெழுதலின் சாபம்" சிறுகதையில் பெண்மன நிலைபாடு**
S.Priyadharshini

**விமணியின் குழந்தைச் செல்வம் படைப்பு - ஒரு பார்வை**
முனைவர் கு.புஷ்பாவதி

**அண்ணாவின் நாடகப் பனுவல்கள் மற்றும் நிகழ்த்துகைகளில் அவரது மறுமலர்ச்சி விடுதலை அரசியல் அரங்கு ஓர் ஆய்வு.**
திரு.கு.ரவிச்சந்திரன்

**பாரதிதாசனின் பெண்ணுலகம்**
கா. கவிதா

**பாரதியார் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகள்**
நா.ரஹமத் நிஷா

**“தோட்டியின் மகன்” நாவல் காட்டும் துப்புரவு தொழிலாளர்களின் வாழ்வியல் நிலை**
மு. வசந்தி

**நூற்றாண்டு கண்ட எழுத்தாளுமை இராஜம் கிருஷ்ணன்-பெண்ணின் குரலாய்**
முனைவர் ப.விமலா அண்ணாதுரை

**கே.ஆர்.மீராவின் புதினங்களில் வெளிப்படும் பெண்மொழி**
நா.சௌந்தர்யா

**Creating Virtual Platforms to Showcase Undergraduates' Artworks**
1.Yasanthini, G.F



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்

**இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் அரசன்**
**முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்**

## Lakśana and Lakśya in Music
**Srivaramangai Sadagopan**

**சதாசிவ ப்ரம்மேந்திரரின் இசை உருப்படிகளில் பகவத்கீதையின் ஸாராம்ஸம்**
**ச. காயத்ரி தேவி**

## Importance of Sāhityam and the Influence of the Great composers in the musical compositions
**Ms. Janaki Sadagopan**

**தெலுங்கும் தமிழும் தித்திக்கும் கலைவடிவம் பாகவதமேளா ஓர் ஆய்வுநோக்கு**
**கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்**

**தமிழ்நாட்டின் மரபுவழி நிகழ்த்துகலையான தெருக்கூத்து**
**கலாநிதி. ஷார்மிலளா றஞ்சித்குமார்**

**திருமந்திரத்தில் காணப்படும் உடல்சார் கருத்துகள் நவீன அறிவியல் பார்வை**
**பேராசிரியர் முனைவர் சு.ஹரிபிரசாத்**

அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி


தமிழ்

# தேவிபாரதியின் ' உயிர்தெழுதலின் சாபம்' சிறுகதையில் பெண்மன நிலைபாடு

## *Devi Bharathi's 'Curse Of Resurrection' Female Mentality In Stort Story*

***சா.பிரியதரிசினி.,*** *முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,*

*நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, அறச்சலூர்-638101.*

***S.Priyadharshini**, Muṉaivar Paṭṭa Ayvalar, Department Of Tamil ,*

*Navarasam Arts And Science College For Women, Arachalur — 638101.*

**நெறியாளர்: முனைவர்.பொ . இராதா ஜெயலட்சுமி,** இணை ப் பேராசிரியர்

*நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, அறச்சலூர்-638101.*

*Neriyalar: Muṉaivar.**Mrs.P.Radha Jayalakshmi**, The moralist Department Of Tamil ,*

*Navarasam Arts And Science College For Women, Arachalur — 638101.*

**ஆய்வுச்சுருக்கம்:**

நல்லதங்காளின் வாழ்க்கையில் தொடங்கிய 'பசியும் பஞ்சமும்' நல்லதங்காளை தற்கொலை செய்வதற்கு பாழும் கிணறு நோக்கி இழுத்துச் சென்றதையே பல ஆண்டுகாலமாகவே பலரும் பேசிக்கொண்டு வருகின்றனர். அத்தோடு நின்றுவிடவில்லை. இன்றைய காலங்களிலும் பெண்ணின் மனம் வேதனைகொள்ளும் போதெல்லாம் தற்கொலை எண்ணமே மனத்தில் ஆளுமை கொள்கிறது. இத்தகைய நிலைபாடு தொடர்ந்து கொண்டுதான் வருகிறது என்பதை உணர்த்தும் வகையில் 'உயிர்த்தெழுதலின் சாபம்' என்னும் கதையில் நல்லதங்காள் மறுபிறவியில் உயிர்பித்து மீண்டும் இராட்டினக் காரியாக வாழும் சூழலில் தனது கணவன் 'நீ வேசி' எனக்கூற அச்சொல்லைத் தாங்கமுடியாமல் தனது எட்டுக் குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு பாழும் கிணறு ஒன்றின்மேல் ஏறி நிற்கிறாள் ராட்டினக்காரி என்பதன் வழி தற்கொலை எண்ணம் மட்டும் தொடர்ந்து கொண்டே வருவது நல்லதங்காள் உயிர்த் தெழுதலின் சாபம் போல் தொடர்ந்து கொண்டு வருவதை தேவிபாரதியின் சிறுகதைவழி இவ்வியல் ஆய்வு செய்கிறது.

**திறவுச் சொற்கள்:**

சூழல், தற்கொலை, குறிப்பான், இலக்கியப்பிரிவு, மனவலிமை, சாபக்கேடு, எண்ணம், சிக்கல்கள், மறுபிறவி, எதிர்மறை, பாலியல், வன்முறை, ஆளுமை, வறுமை.

*ABSTRACT*

*The hunger and poverty that started in Nalvuthangal's life, which led to his death by drowning, have been dragged by many people. It did not stop there. Even in today's times, whenever the smell of gold is smelled, the thought of suicide has crossed his mind. In order to make it clear that this kind of persistence is coming, it is the time of resurrection and in the story, Nalvuthangal is reborn as a 66-year-old prostitute, unable to bear the word that her husband is a prostitute, she gathers her eight children and goes to a well to sing, and the thought of suicide continues. Nalvuthangal's resurrection continues — the short story of Devipanthi's short story.*

***Keywords:***

*Environment, Suicide, Marker, Department Of Literature, Heartfall, Cursory, Thought, Problems, Reincarnate, Negative, Sexuality, Vidence, Personality, Poverty.*

**முன்னுரை**

பெண்ணின் மனம் பூவிலும் மென்மையானது என்பர். அம்மனத்தில் குடும்பம் என்ற குறுகிய வட்டம் கொண்டு வாழ்க்கை இயல்பாய் அமைக்கப்பட்டுள்ளது. அக்குடும்ப அமைப்பில் தன்னைச்சுற்றியுள்ள சூழல்களினால், பல்வேறு சிக்கல்கள் தோற்றம் கொள்கின்றன. இத்தகைய சூழல்களில் பெண்மனம் செய்வது என்னவென்று அறியாமல் " தற்கொலை" மட்டுமே தீர்வாக அமையும் என்று ஆழ்மனம் தேடல் கொள்கிறது. இத்தகைய நிலையைக் குறிப்பிடும் வகையில் தேவிபாரதி **"உயிர்த்தெழுதலின் சாபம்"** என்னும் கதையில் நல்லதங்காளின் வாழ்கையில் தொடங்கிய தற்கொலை எண்ணம் மறுபிறவி எடுத்தும் தொடர்ந்து வருவதை வழிநெடுகிழும் **"குன்றின் மணிகள்"** போட்டது போல் பெண்களின் மனதிலும் தற்கொலை எண்ணமானது **"குறிப்பான்"** போல் தொடர்வதை பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**சிறுகதை இலக்கியம்**

நம் உலகம் ஒரு மணிக்கு 25000 மைல் வேகத்தில் சுழல்கிறது. அதனோடு ஒட்டி ஓட்டமும் நடையுமாக நிற்கவும் காலமில்லாது நினைக்கவும், நேரமின்றிப் பம்பரமாக சுழல்கின்றான் மாந்தன். இந்த விரைவுலகத்தில் ஒய்வு கிடைப்பதே அரிது அப்படிக் கிடைத்தாலும் சில பல மணித்துளிகளே கிடைக்கும். அதற்கேற்ற வகையில் நம் காலத்தில் தோன்றிச் சிறக்கும் இலக்கியப்பிரிவு சிறுகதையாகும்.

தம் வாழ்வில் கண்டும் கேட்டும் உணர்ந்தவற்றை கற்பனை கலந்து கதையாக வடிக்க இயலுமென்றால் எத்தனை கதைகள் இனத்தோன்றும் என்பதற்கு சான்றாக "உயிர்த்தெழுதலின் சாபம்" என்னும் சிறுகதை படைக்கப்பட்டுள்ளது.

**பெண்மனத்தின் இயல்பு**

பெண்மனம் மென்மையானது எனினும் மனவலிமையும் கொண்டது. தனக்கு வரும் பலசிக்கல்களை எதிர்கொள்ளும் மனவலிமையை இயற்கையாகவே கடவுளால் படைக்கப்பட்டுள்ளது.,இருப்பினும் ஒருசில இடங்களில் தன்னை அறியாமலேயே "தற்கொலை எண்ணம்" மட்டும் அவர்கள் மனதில் எளிதில் ஆட்கொள்கிறது. இது பெண்ணினத்தின் "சாபக்கேடு" போல் தொடந்து கொண்டே வருகிறது. இந்நிலைக்கு மூலகாரணமாக ஏதேனும் ஒரு வகையில் வறுமை தொடர்ந்து வருகிறது. வறுமைநிலையைப் பற்றி வள்ளுவர் குறிப்பிடுகையில்

**"நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்**
**துன்பங்கள் சென்று படும்".1**

மேலும் கே.பி.சுந்தரம்பாள் பாடிய பாடலானது,

**"கொடியது கேட்பின் வரிவடிவேலாய்**
**கொடிது கொடிது வறுமை கொடிது அதனினும்**
**கொடிது இளமையில் வறுமை"**

எனக் குறிப்பிடுகிறார். வறுமை ஒரு மனிதனுடைய வாழ்வில் பலசிக்கல்களை தோற்றுவிக்கின்றன. இன்றைய மனிதசமுகம் வறுமையில் இருந்து மீண்டு வந்தாலும் பொருளாதார வளர்ச்சியில் வறுமை என்பது முழுமையாக வேரருக்கப்படாத ஒன்றாகவே உள்ளது.

**நல்லதங்காளும் வறுமையும்**

நல்லதங்காள் வாழ்வில் "பஞ்சமும் பசியும்" தலைவிரித்தாடியதால் தன்னிடம் உள்ள பொருள்கள் அனைத்தையும் விற்றுதீர்த்த பின்பும் பசியார முடியவில்லை. குழந்தையின் பசியார தனது ஏழு குழந்தைகளுடன் பிறந்த வீட்டில் சிலகாலம் தங்கியிருந்து வரலாம் என்ற எண்ணத்தில் சென்றால் நல்லதங்காள். அங்கு அலங்காரி செய்த கொடுமையும், கடும் சொற்களும் தாளாது, செய்வது அறியாது பாழும் கிணறு சென்று தற்கொலை செய்து கொள்கிறாள். இந்நிலையை,

**"வேலையாட்கள் சொல்லக் கேட்டிருந்தான் பயணம் முடிந்து ஊர் திரும்பியிருந்த நல்லான், வாசலில் உடைந்த பச்சை மண்பானையும் அவள் அடுப்பெரிக்கப் பயன்படுத்திய பச்சை**

**வாழைத்தண்டின் கரிந்த துண்டுகளும் கிடைத்தன. வெந்தும் வேகாமலும் இரைந்து கிடந்த சோற்றுப் பருக்கைகளைக் கொத்திப் பசி தீர்த்துக் கொண்டிருந்தன சில காகங்கள்.''**

இவற்றால் நல்லாளும் அவளின் ஏழு குழந்தைகளும் பட்ட பசியின் கொடுமையைப் பார்த்து உணர்கிறான் நல்லான். இத்தகைய நிலையை இப்பூமி உள்ள வரை எவரும் மறக்கக்கூடாது என்பதற்காகவே கோவில்கட்டி வழிபடுகின்றனர். நல்லதங்காளின் வரலாறு அறிந்தும் கூட மக்களின் மனதில் தற்கொலை எண்ணம் என்பது ஒரு ''சாபக்கேடு'' போல் பலரது வாழ்விலும் ஏதேனும் ஒரு வகையில் தொடர்ந்து கொண்டே வருவதை செய்திகள் வழி அறிகிறோம்.

**மறு பிறப்பில் நல்லதங்காள்**

**''உயிர்த்தெழுதலின் சாபம்''** என்னும் கதையில் நல்லதங்காள் மறுபிறவி எடுத்து காணகத்தில் சிலகாலம் வாழ்ந்து பின் மக்களை பார்க்க வேண்டும் என்ற ஆசையில் சொந்த ஊர் நோக்கி வருகிறாள் நல்லாள். ஊரும் மக்களும் மாறிவிட்டனர். அவ்வூரில் திருவிழா என்பதால் இராட்டினம் சுற்றிகொண்டிருந்தது. அதைப்பார்த்த குழந்தைகள் இராட்டினம் சுற்ற ஆசைப்படுகின்றனர்.அதற்கு பணம் இல்லாத்தால் மறந்து விடுகிறாள் நல்லாள். இராட்டினகாரன் குழந்தைகள் பாவம் எனக்கூறி இராட்டினம் சுற்றிக்காட்டுறான். இரவும் வந்து விட்டது, எங்குசெல்வது எனத்தெரியாது நிற்பதை உணர்ந்து, தன்னுடனே தங்க சொல்கிறான் இராட்டினக்காரன். மூத்தமகன் இராட்டினம் சுற்றுவதில் கைதேர்ந்தவன் ஆகிறான். பின்பு அவனுடன் சேர்ந்து வாழ்ந்து ஒரு குழந்தையும் பெற்று எட்டுக்குழந்தைகளோடு மகிழ்வோடு வாழ்கிறாள் நல்லாள்.

மீண்டும் ''பஞ்சம்'' வருகிறது. திருவிழா இல்லாததால் சாப்பாட்டிற்கு கஷ்டம் வருகிறது. தொழில் இல்லாமல் இருப்பதால் இராட்டினக்காரன் குடிபோதையில் சண்டையின்போது ''நீ ஒரு வேசி'' எனக் கோபத்தில் கூறிவிடுகிறான். இதனை''

**''நீ ஒரு வேசி ஏழு பிள்ளைகளை எவன்கிட்ட பெத்தையோ, எனக்கூறிய மறுநொடியே நல்லாள் எட்டுக் குழந்தைகளோடு பாழும் கிணற்றில் வந்து நின்றாள்''**

என்ற வரிகள் முன்புதான் வாழ்ந்த வாழ்வே நினைவுக்கு கொண்டு வருகிறது. தனது தவறை உணர்ந்த இராட்டினக்காரன் நல்லாளிடம் மன்னிப்பு கேட்டு வேண்டுகிறான். அன்று நல்லாள் முட்டாள் தனமாக செய்த தவறை இன்று நீயும் செய்துவிடாதே எனக்கூறி வேண்டுகிறான். இராட்டினக்காரன், இக்கதையை பெண்ணின் இயல்பான மனநிலையே வெளிக்காட்டுகிறது.

**தற்கொலை எண்ணம்**

உலகம் முழுவதும் தற்கொலை என்பது மிகப் பெரிய பிரச்சினையாக இருந்து வருகிறது. பல தற்கொலை சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. மேலும்,

**"ஓர் உயிரை பிறர் கொன்றாலும் குற்றமே!**

**தானே தன் உயிரை அழித்துக் கொண்டாலும் அது குற்றமே!"**

என பசுமைக்குமார் கூறுவது தற்கொலையின் நிலையையும் உயிரின் மதிப்பையும் உணர வைக்கிறது.

**தற்கொலைக்கான சில காரணங்கள்**

**"வாழ்க்கையில் எதிர்மறையான சம்பவங்களை சந்திப்பவர்கள் மன உளைச்சலுக்கு ஆளானவர்கள், குடி போதைக்கு ஆளானவர்கள், ஆளுமை பண்புக்குறைபாடுகள் கொண்டவர்கள், நடத்தைப் பண்பு கோளாறுகள் கொண்டவர்கள், உடல்ரீதியான வன்முறை, தீவிர உணர்ச்சி, பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்கள், குடும்ப வரலாற்றில் முன்னர் தற்கொலை சம்பவம் நடந்திருப்பது, கடுமையான நோய்க்கு ஆளானவர்கள்"** என பலரும் தற்கொலையில் ஈடுபடுகிறார்கள். மேலும் இங்கே சொல்லப்படாத காரணங்கள் கூட இருக்கலாம் இத்தகைய எண்ணத்தை மாற்றிக் கொண்டு வாழப்பழக வேண்டும்.

**முடிவுரை**

வாழ்வதற்கு நமக்கு தைரியம் இல்லாமல் தற்கொலையே நோக்கி மனம் பயணிக்கிறது. தற்கொலை செய்வதற்கு இருக்கிற மனதைரியத்தில் ஒரு பங்கு நாம் வாழ்வதற்கு இருந்தால் வாழ்க்கையே சிறப்பாக வாழமுடியும் என்பதை நாம் ஒவ்வொருவரும் உணரவேண்டும்.மேலும் தற்கொலை உணர்ச்சிக்கு தடைபோட வேண்டும். மனஉறுதியோடு தனக்குவரும் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் தைரியத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஆளுமைத் திறன்களை வளர்த்துக்கொள்வதுடன் ,உணர்ச்சிகளையும் கையாளத்தெரிந்து கொள்ள வேண்டும் என்பதை இவ்வாய்வின் வழி அறியமுடிகிறது.

## *References:*


1. *Silphi Balasubramaniyam — Thirukkural, Thamarai Publications (P) LTD Second Edition: October 2014. Kural — 1045.*
2. *K .P. Sundarambal — Kandhan Karunai Theerapodal*
3. *Devi Bharathi Vedenpa —Kalachuvadu Publishing House First Edition. December -2013 P.No.144*

4. *Devi Bharathi Vedenpa —Kalachuvadu Publishing House First Edition . December-2013 P.No.144*
5. *Pasumoikumar — How tocentrol Emotions. Thamarai Publications (P) LTD. Third Edition, September 2015. P.No.5*
6. *Pasumaikumar — How to control Emotions, Tamarai Publication (P) LTD Third Edition Septemper 2015 P.No.5*

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஏப்ரல் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com